**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 ஜவஹர் மெயின் ரோட்டில் நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகம் உள்ளது. இவ்வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.20, 21 மற்றும் 22 கடைகளில் தரைதளம் (Flooring) NH சாலையை விட தாழ்ந்த நிலையில் அமைந்துள்ளதால் மழைநீர் மற்றும் சாக்கடை கழிவுநீர் புகுந்து பொருட்சேதம் மற்றும் உயிர்சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள கட்டிடத்தின் தரைமட்டத்தை உயர்த்தி புதிதாக கான்கிரீட் மேற்கூரை அமைத்தும் மற்றும் பராமரிப்பு பணி செய்து தரக்கோரி குத்தகைதாரர் நகராட்சியில் விண்ணபப்ம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி விண்ணபப்த்தில் குத்தகை காலத்திற்கான வாடகை தவறாமல் செலுத்துவதாக உறுதி அளித்துள்ளார். மேலும் இந்நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் பழுதடைந்தால் மேற்படி கடைகளை நகராட்சியே பழுது பார்க்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.15763/93 நாள்.18.10.93ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கண்ட கடைகளின் பழுது பார்ப்பினை நகராட்சியே மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.873/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2020-2021 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் வருவாய் மற்றும் மூலதன நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் : 195**

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 2**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி **2020–2021**ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, அண்ணாமலையார் நகரில் மழைநீர் வடிகால் வசதி அமைத்தல் பணிக்காக **04.08.2020** அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, அண்ணாமலையார் நகரில் மழைநீர் வடிகால் வசதி அமைத்தல் பணி | **9.70** இலட்சம் | திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி | **0.30%** மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.அய்யாசாமி, பு.புளியம்பட்டி | **2.70%** மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.30% குறைவாக வழங்கியுள்ள திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**(ந.க.எண்.844/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 196**

**தீர்மானம் :** அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் சாலையில், நகராட்சி அலுவலக சுற்றுச்சுவர் மீது தகரசீட் வைத்து ஆக்கிரமிப்பு செய்து வரும் பூ வியாபாரிகள் ஒருங்கிணைக்கப்படாத சங்கம் ஈரோடு மூலமாக, நகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கினை திரு. V. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞர் வசம் ஒப்படைத்து எதிர் வழக்காடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.944/2020/எப்1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 197

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.ஆ.கதிரேசன் என்பவர், ஈரோடு மாநகராட்சிக்கு பணி மாறுதலில் சென்று, தற்பொழுது ஈரோடு மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்குறிப்பிட்ட துப்புரவு ஆய்வாளர் திரு. ஆ. கதிரேசன், தன்னை நிரந்தரமாக ஈரோடு மாநகராட்சியில் ஈர்த்து கொள்ளக் கோரி விண்ணப்பித்துள்ளதன்பேரில், அரசு கடித எண்.9122/MC6/2020 நாள்.15.07.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5508/2019/MCA-3 நாள்.22.06.2020 கடிதங்களுக்கிணங்க, தனியர் ஏற்கெனவே இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி, தற்பொழுது அயற்பணி அடிப்படையில், ஈரோடு மாநகராட்சியில் பணியாற்றி வரும் திரு. ஆ. கதிரேசன், துப்புரவு ஆய்வாளர் நிரந்தரமாக, ஈரோடு மாநகராட்சியில் ஈர்த்து கொள்ள ஆட்சேபனை ஏதுமில்லை என பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.739/2020/சி1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 198**

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2020—2021ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.20,21 மற்றும் 22இல் தரைமட்டத்தை உயர்த்தி புதிதாக கான்கிரீட் மேற்கூரை அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் பணிக்காக 07.08.2020 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.20,21 மற்றும் 22இல் தரைமட்டத்தை உயர்த்தி புதிதாக கான்கிரீட் மேற்கூரை அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 7.00 இலட்சம் | திரு.அய்யாசாமி, பு.புளியம்பட்டி | 0.50% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி | 5.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.50% குறைவாக வழங்கியுள்ள திரு.அய்யாசாமி, பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.873/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 199**

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக மூன்று கடைகள் கட்டுதல் பணிக்காக 07.08.2020 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வீதியில் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் வடக்கு நோக்கி கூடுதலாக மூன்று கடைகள் கட்டுதல் பணி | 4.50 இலட்சம் | திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி | 0.40% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.அய்யாசாமி, பு.புளியம்பட்டி | 3.50% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.40% குறைவாக வழங்கியுள்ள திருமதி.வள்ளியம்மாள், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.848/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 200

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 7**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் குத்தகை இனங்கள் வாயிலாக வரக்கூடிய வருவாய் நகர வளர்ச்சிப் பணி மற்றும் பணியாளர் ஊதியம், மின்கட்டணம் ஆகியவற்றிற்கு போதுமான நிதி இல்லாத காரணத்தால் வருவாயினை உயர்த்தவும், ஆணையாளர் அவர்களின் நேரடி ஆய்விற்குப் பிறகு நகராட்சி அலுவலக வளாகத்தின் கிழக்கு பகுதியில் சத்திரம் சாலைக்கு மேற்குப்புறம் காலியாக உள்ள இடத்தில் கிழக்கு பார்த்து மூன்று கடைகள் கட்ட (Shop No.7 to 9) உத்தேசிக்கப்பட்டது. மேற்கண்ட காலியிடத்தில் மூன்று கடைகள் முறையே 10”0” X 16”0”(3.05m X 4.88m) அளவில் கட்டிடம் நகராட்சியின் தற்போதுள்ள நிதி ஆதாரத்தினை கொண்டு மேற்கூரை தகரத்தில் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 932/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணியினை **2020-2021** ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் வருவாய் மற்றும் மூலதன நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் :** 201

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 8**

இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத நகராட்சி வளாகத்தின் பின்புறம் உள்ள, சத்திரம் வீதியில் கீழக்கு நோக்கி உள்ள காலியிடத்தில் புதியதாக கடைகளை கட்டி வாடகைக்கு விடும் பட்சத்தில், நிதி ஆதாரங்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டு வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து சுமார் ரூ. 19.20 இலட்சத்தில் 10'x16' என்ற அளவில், மேற்கூரை தகரசீட் கொண்டு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு பணி ஆணை வழங்கப்பட்டது. கட்டுமான பணி நடைப்பெற்று கொண்டிருக்கும் நிலையிலே, தினசரி நாளிதழில் 07.07.2020–ஆம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டு (Pre Auction) முன் பொது ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி 06.08.2020–ஆம் தேதியன்று நடைபெற்றதில், முன் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. முன் ஒப்பந்தப்புள்ளி 6 கடைகளுக்கு வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள், கீழ்க்கண்ட விபரப்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள்.

| வரிசை எண் | முன் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | சத்திரம் ரோடு கடை எண் | முன் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச முன் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.பா.விகாஸ் த/பெ. ஆர் பாலசுப்பிரமணியன் | 1 | | 10750/– |
| 2 | திருமதி. என். ஜெயந்தி | 1 | 10600/– | |
| 3 | திருமதி. எஸ். பத்மா | 1 | 10501/– | |
| 4 | திரு. என். பிரகதீஷ் த/பெ ஆர்.நடராஜன் | 2 | | 10750/– |
| 5 | திருமதி. ஆர். விமலா தேவி | 2 | 10600/– | |
| 6 | திரு. பி. நாகாராஜன் | 3 | 6500/– | |
| 7 | திரு. எஸ். ரமேஷ்குமார் | 4 | 6000/– | |
| 8 | திரு. எஸ். தாமோதரசாமி, பி.ஏ., பி.எல்., | 5 | 5000/– | |
| 9 | திருமதி. எஸ். சந்திரகலா | 6 | 5500/– | |
| 10 | திரு. பி. கணேசன் | 6 | 9000/– | |

எனவே, தற்போது தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட காரணத்தாலும், தற்போது உலகம் முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ள நிலையிலும், பொருளாதார நிலை மந்தமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும், 2–ஆம் நிலை நகராட்சியாக இருப்பதாலும், மிகக் குறைந்த அளவு மக்கள் தொகை கொண்ட நகராட்சியாக உள்ளதாலும், நகராட்சி மூலம் முன்பு கட்டப்பட்ட கடைகள் பெரும்பாலும் போட்டியின் காரணமாக ஏலம் எடுக்கப்பட்ட காரணத்தால், இரண்டு வருட காலமாக பூட்டப்பட்ட நிலையில் உள்ளதாலும் தற்போது புதிதாக தகர மேற்கூரையுடன் 48 சதுரடியில் கட்டப்பட்ட இக்கடைகளுக்கு வரப்பெற்றுள்ள மாத வாடகை தொகையானது உள்ளூரில் நிலவி வரும் தனியார் வாடகையினை ஒப்பிடும் போது கூடுதலாக உள்ளதாலும், தற்போது கடையினை உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர்கள் தொடர்ந்து கடையை நடத்துவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும், தற்போது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர்களின் வாடகைத் தொகையினை ஏற்கக்கூடிய நிலையில், நகராட்சிக்கு மாதந்தோறும் நிரந்தர வருமானம் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தாலும் தற்போது முன் ஒப்பந்தப்புள்ளியில் பதிவு செய்துள்ள 2 கடைகளுக்கு உயர்ந்தபட்ச வாடகை தொகையினை ஏற்று கடையினை ஒப்படைப்பு செய்யவும், மீதமுள்ள நான்கு கடைகளுக்கு மறு ஏலம் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க. எண்.547/2020/அ1)

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 202

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பிறபடிகள் வழங்கவும், நகராட்சி செலவீனத்தை மேற்கொள்ள போதுமான நிதி பற்றாக்குறை உள்ளதனை அடுத்து, இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத அம்மா உணவகத்தின் அருகில், சத்திரம் வீதியில் வடக்கு நோக்கி உள்ள காலியிடத்தில் முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி (Pre auction Cum Tender) முறையில் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி அதன் மூலம் புதியதாக கடைகளை கட்டி வாடகைக்கு விடும் பட்சத்தில், எதிர்காலத்தில் வருவாய் மற்றும் மூலதன நிதிக்கு வருவாய் உயர்த்தும் நோக்கில் சுமார் ரூ. 14.20 இலட்சத்தில் 6'x8' என்ற அளவில், மேற்கூரை தகரசீட் கொண்டு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு பணி ஆணை வழங்கப்பட்டது. கட்டுமான பணி நடைப்பெற்று கொண்டுயிருக்கும் நிலையிலே, தினசரி நாளிதழில் 24.07.2020–ஆம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டு (Pre Auction) குறுகிய கால முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி 07.08.2020–ஆம் தேதியன்று நடைபெற்றதில், முன் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. முன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள், கீழ்க்கண்ட விபரப்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள்.

| வரிசை எண் | முன் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | சத்திரம் ரோடு கடை எண் | முன் ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்தபட்ச முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ். ராம மூர்த்தி | 1 | | 7500/– |
| 2 | திரு. ஆர்.அன்பழகன் | 1 | 5100/– | |
| 3 | திருமதி. கே. விசாலாட்சி | 1 | 4400/– | |
| 4 | திரு. டி. முகமது கவுஸ் | 1 | 4000/– | |
| 5 | திரு. ஆர்.அன்பழகன் | 2 | | 5100/– |
| 6 | திருமதி. கே. விசாலாட்சி | 2 | 4300/– | |
| 7 | திரு. எஸ். ஜெயராஜ் | 3 | 4680/– | |
| 8 | திரு.அ.கிருஷ்ணமூர்த்தி | 3 | | 4999/– |
| 9 | திரு.அ.கிருஷ்ணமூர்த்தி | 4 | | 4999/– |
| 10 | திருமதி. W. பர்ஹானா | 4 | 4100/– | |
| 11 | திரு. வி.அங்குசாமி | 5 | | 4550/– |
| 12 | திரு. டி. முகமது கவுஸ் | 5 | 3000/– | |
| 13 | திருமதி.பி.குணவதி | 6 | | 4500/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | திருமதி. ஆர். ரேணுகா | 6 | 4000/– | |
| 15 | திருமதி.எஸ்.பத்மா | 7 | | 4750/– |
| 16 | திரு. கே. அன்வர்பாட்சா | 7 | 4200/– | |
| 17 | திருமதி.எஸ்.பத்மா | 8 | | 4750/– |
| 18 | திரு. டி. முகமது கவுஸ் | 8 | 3000/– | |
| 19 | திரு. வி.மூர்த்தி | 9 | | 4500/– |
| 20 | திரு. ஏ. டேவிட் | 9 | 4000/– | |
| 21 | திரு. டி. முஸ்தபா | 9 | 3000/– | |
| 22 | திரு. டி. முஸ்தபா | 10 | 3000/– | |
| 23 | திரு. கே.ஈஸ்வரன் | 10 | | 4500/– |
| | மொத்தம் | | | 50148/– |

மேற்படி வரப்பெற்ற முன் ஒப்பந்தப்புள்ளியின் மூலம் நகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50148/– வருமானமாக வருகிறது. 10 கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களிடமிருந்து வைப்புத் தொகையாக ரூ.5,00,000/– வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடைகளுக்கு 12 மாத வாடகை முன்வைப்புத் தொகையாக ரூ.6,01,776/– வரவுள்ளது ஆக மொத்தம் வைப்புத் தொகையாக ரூ.11,01,776/– நகராட்சிக்கு வருமானம் வர வாய்ப்புள்ளது.

நகராட்சி ஏல அறிக்கையில் கண்டுள்ள பொது நிபந்தனையில் வேறு நபர்கள் எவரேனும் கடையை வைத்துக் கொள்ள விரும்பினால், ஏல உபவிதி 11 (அ) படி மறு ஏலம் கோர விரும்பும் நபர் ஏலம் (அல்லது) ஒப்பந்தப்புள்ளி முடிந்த இனங்களுக்கு ஏலத் தொகையில் உள்ள அதிகத் தொகைக்கு எடுத்துக் கொள்ள விரும்பினால், 24 மணி நேரத்திற்குள் (வேலை நாட்கள்) கேட்கப்பட்ட தொகையைக் காட்டிலும், 10 சதவிகிதத்திற்கு குறையாத தொகையினை அதிகம் வைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டு உச்சக் கேள்வித் தொகை முழுவதையும் செலுத்தி, ஏலம் நடத்தும் அலுவலருக்கு மனு செய்து கொள்ளவேண்டும். அதன்படி மேற்படி கடைகளுக்கு எவரும் மறு ஏலம் கோரி தொகை செலுத்தப்படவில்லை.

எனவே, தற்போது தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட காரணத்தாலும், தற்போது உலகம் முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ள நிலையிலும், பொருளாதார நிலை மந்தமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும், 2–ஆம் நிலை நகராட்சியாக இருப்பதாலும், மிகக் குறைந்த அளவு மக்கள் தொகை கொண்ட நகராட்சியாக உள்ளதாலும், நகராட்சி மூலம் முன்பு கட்டப்பட்ட கடைகள் பெரும்பாலும் போட்டியின் காரணமாக ஏலம் எடுக்கப்பட்ட காரணத்தால், இரண்டு வருட காலமாக பூட்டப்பட்ட நிலையில், தற்போது புதிதாக தகர மேற்கூரையுடன் 48 சதுரடியில் கட்டப்பட்ட இக்கடைகளுக்கு வரப்பெற்றுள்ள மாத வாடகை தொகையானது உள்ளூரில் நிலவி வரும் தனியார் வாடகையினை ஒப்பிடும் போது கூடுதலாக உள்ளதாலும், தற்போது கடையினை உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர்கள் தொடர்ந்து

கடையை நடத்துவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும், தற்போது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர்களின் வாடகைத் தொகையினை ஏற்கக்கூடிய நிலையில், நகராட்சிக்கு மாதந்தோறும் நிரந்தர வருமானம் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தாலும் தற்போது முன் ஒப்பந்தப்புள்ளியில் பதிவு செய்துள்ள உயர்ந்தபட்ச வாடகை தொகையினை ஏற்று கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
(ந.க. எண்.547/2020/அ1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 203

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத நகராட்சி வளாகத்தின் பின்புறம் உள்ள, சத்திரம் வீதியில் தெற்கு நோக்கி உள்ள காலியிடத்தில் தற்போது, புதியதாக கட்டப்பட உள்ள கடை எண். 11—க்கு கடையின் மேற்கூரை தகரசீட்டினால் ஆனது. கடையின் அளவு (8 x 10) 80 சதுரடி கொண்டதாகும். புதியதாக கடைகளை கட்டி வாடகைக்கு விடும் பட்சத்தில், நிதி ஆதாரங்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டு வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து சுமார் ரூ.1.50 இலட்சத்தில் 8'x10' என்ற அளவில், மேற்கூரை தகரசீட் கொண்டு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டு பணி ஆணை வழங்கப்பட்டது. கட்டுமான பணி நடைப்பெற்று கொண்டிருக்கும் நிலையிலே, தினசரி நாளிதழில் ஏற்கெனவே 24.07.2020—ஆம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டு (Pre Auction) முன் பொது ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி 07.08.2020—ஆம் தேதியன்று நடைபெற்றதில், முன் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. ஒப்பந்தப் புள்ளியில் திருமதி எம். கே. ராசாத்தி ஒருவர் மட்டுமே மாத வாடகை ரூ.5250/— உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

எனவே, தற்போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மூலம் மாத வாடகையாக கேட்டுள்ள தொகையானது ஏற்கனவே, இவ்விடத்தில், 10 கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையுடன் ஒப்பிடும் போது கூடுதலாக உள்ளதாலும், மேற்படி கடை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில், கால விரயம் மற்றும் விளம்பரக் கட்டண செலவும் நகராட்சிக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கூடுதல் வாடகைக்கு கேட்க வாய்ப்பு இல்லை என கருதுவதாலும், மேற்படி கடையின் கட்டுமான செலவினத் தொகையில் 100 சதவிகிதத் தொகை ஏலதாரரரிடமிருந்து பெறப்பட்டுள்ளதாலும், தற்போது முன் ஒப்பந்தப்புள்ளியில் பதிவு செய்துள்ள உயர்ந்தபட்ச வாடகை தொகையினை ஏற்று கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

(ந.க. எண்.547/2020/அ1)

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 204

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சிப் பொறியாளர் தனது 03.08.2020 ஆம் தேதிய குறிப்பில், இந்நகராட்சி அலுவலகத்திற்கு பின்புறம் மற்றும் அம்மா உணவகத்தின் கிழபுறத்தில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் முன்பு கட்டப்படவுள்ள 10 கடைகளுக்கு அருகில் மீதமுள்ள காலியிடத்தில் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து புதியதாக கட்டப்படவுள்ள கடைகளுக்கு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( Pre Auction Tender) நடவடிக்கை மேற்கொள்ளவும், 90 நாட்களுக்குள் கட்டிட பணி முடிக்கப்படுமென தெரிவித்துள்ளதன் பேரில், அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை மற்றும் ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள, அறிக்கையில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்நகராட்சி வார்டு எண்.12, சத்திரம் சாலையில் உள்ள காலியிடத்தில், கிழக்கு முகமாக 10' x 16', மேற்கூரை : தகர சீட் மேய்ந்த, 3 கடைகள் (7 முதல் 9 வரை) மற்றும் சத்திரம் சாலையில் உள்ள அம்மா உணவகத்தின் கிழக்கு புறத்தில் உள்ள காலியிடத்தில், வடக்கு முகமாக 6' x 8' , மேற்கூரை : தகர சீட் மேய்ந்த 7 கடைகள் (11 முதல் 17 வரை) முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( Pre Auction Tender) நடவடிக்கை மேற்கொள்ளவும் இதனை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.547/2020/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 205

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.08.2020–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, சர்ச் தெருவில் ஏறத்தாழ 15 குடியிருப்பு கட்டிடங்கள் உள்ளன. இக்குடியிருப்புகளில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் இப்பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை நகராட்சியின் மூலம் தொட்டி அமைக்கப்பட்டு சேகரித்து வாரம் ஒரு முறை நகராட்சியின் கழிவுநீர் வாகனம் மூலம் நீக்கப்பட்டு சுத்தம் செய்யப்படுகிறது. இதனால் ஏராளமான பொருட்சேதம் ஏற்பட்டு நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. மேலும் அருகில் உள்ள காவலர் குடியிருப்பு மதில் சுவருக்கு பாதிப்பு ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. மழைநீர் தேங்கும் பிரச்சனை ஏறத்தாழ 40 ஆண்டுகளாக உள்ளது. அவ்வாறு தேங்கும் மழைநீரினை காவலர் குடியிருப்பு மதில்சுவர் வழியாகவும், பொதுப்பாதை வழியாக ஆசாத் வீதியில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான மழைநீர் வடிகாலில் சேர்க்கப்பட வேண்டும். இப்பணிக்காக 400mm D.I Pipe மற்றும் 450mm R.C.C Hume Pipe பயன்படுத்தப்பட வேண்டும். இப்பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 846/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணியினை 2020-2021 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் வருவாய் மற்றும் மூலதன நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் :** 206

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது

(ஒப்பம்) ம. முத்துக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.